**தேதி:** பிப்ரவரி 13, 2014

**<u>பாவெல்-மோடி சந்திப்பு, அமெரிக்காவின் சீரமைப்பு நடவடிக்கை</u>**

**அருண் ஜேட்லி**
மாநிலங்களவை எதிர்கட்சித் தலைவர்

இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் திருமதி நான்சி பாவெல் குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடியை இன்று சந்தித்தார். இந்தியாவின் உள்நாட்டு நிலைமையை அமெரிக்கா தானாக முன்வந்து மதிப்பீடு செய்ததன் அடிப்படையில் அந்நாட்டு நிர்வாகம் குஜராத் முதலமைச்சருடனான தொடர்பைப் புதுப்பித்துக்கொள்ள முடிவு செய்துள்ளதாகத் தோன்றுகிறது. அமெரிக்க நிர்வாகம் தன்னை திருத்திக்கொள்ளும் நடவடிக்கையாக இதை நான் கருதுகிறேன். இந்தியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதியுடன் தொடர்பு வைத்துக்கொள்ளக் கூடாது என்ற முந்தைய முடிவு, எந்த வலுவான ஆதாரங்களோ அல்லது நீதி மன்றத் தீர்ப்புகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. ஊடகமும் சில தன்னார்வ அமைப்புகளும் மேற்கொண்ட அதீதமான பிரச்சாரம் காரணமாகவே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.

பா.ஜா.க.வைப் பொருத்தவரை இந்த சந்திப்பு என்பது தூதரக ரீதியிலான வழக்கமான செயல்பாடுகளில் ஒரு பகுதிதான். 2014 பொதுத் தேர்தலில் குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி முன்னணி வகிப்பார் என்பதில் சந்தேகம் இல்லை. குஜராத் மாநில தேர்தல்களில் மூன்று தடவை அவர் வெற்றி பெற்றிருக்கிறார். அவருடன் தொடர்பு வைத்துக்கொள்ளக்கூடாது என சில நாடுகள் முன்பு முடிவு செய்ததற்கு இந்திய வெளியுறவுக் கொள்கையின் தோல்விதான் காரணம். இந்தியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் குறித்த வேறொரு நாட்டின் கருத்துக்கு எதிர்வினையாற்றுவது ஒரு அரசியல் கட்சி அல்லது ஒரு மாநில அரசின் வேலையல்ல. அது வெளி விவகாரத் துறை அமைச்சகத்தின் கடமை. ஐக்கிய முற்போக்கு கூட்டணி தலைமையில் செயல்படும் வெளி விவகாரத் துறை அமைச்சகம் இந்த விவகாரத்தில் தோல்வி அடைந்து விட்டதா? ஆம் அதில் சந்தேகமே இல்லை.

இந்த சந்திப்பைக் குறித்த வெளி விவகாரத் துறை அமைச்சர் திரு. சல்மான் குர்ஷித் வெளியிட்ட கருத்து இதற்கு வெளிப்படையான ஒரு சான்று. இன்று காங்கிரஸ் கட்சி பெருமளவில் சீர்குலைந்துள்ளது. இது உள்ளங்கை நெல்லிக்கனி போல தெளிவாகத் தெரிகிறது. அண்மையில் நடந்த தேர்தல்களில் இது படுதோல்வி அடைந்தது இதற்கு சிறந்த உதாரணம். ஒட்டுமொத்தமாக காங்கிரஸ் கட்சியை மக்கள் புறக்கணித்துள்ளது இது உணர்த்துகிறது. அக் கட்சியின் வாக்காளர்கள் தளம் இல்லாமல் போய்விட்டது. அதன் தலைவர்களின் அகம்பாவம் இன்னும் நீடிக்கிறது. கடந்து சில மணி நேரத்தில் அக் கட்சி வெளியிட்ட கருத்து இந்த அகம்பாவத்தை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இந்தியாவின் தேர்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதியின் கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்புள்ள வெளி விவகாரத் துறை அமைச்சர், அமெரிக்க தூதர் குஜராத் முதலமைச்சரை சந்தித்ததில்கூட கவலை அடைந்துள்ளதாகத் தெரிகிறது.

இந்திய-அமெரிக்க நல்லுறவு, இந்திய வெளியுறவு கொள்கையின் ஒரு முக்கியமான அடித்தளத் தூண். திரு. அடல் பிஹாரி வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி

அரசு இந்த நல்லுறவை வலுப்படுத்துவதற்கு பாடுபட்டுள்ளது. கட்டுப்பாடு மற்றும் ராஜதந்திர நடவடிக்கை மூலம்தான் தற்காலிகமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்பதை அனைத்து தரப்பினரும் உணர வேண்டும். அசாதாரண நிகழ்வுகள் நல்லுறவின் சமன்பாட்டை சீர்குலைக்கக்கூடிய வகையில் அவற்றை மிகைப்படுத்தக்கூடாது.

*********